www.padippakam.com

Search search...







# தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள்-2010

Sunday, 10 October 2010 02:09 administrator

தலைமைச் செயலகம், த/செ/ஊ/அ/07/10

தமிழீழ விடுதலைப் புலிகள்,

தமிழீழம்.

10/10/2010.

அன்பார்ந்த தமிழீழ மக்களே,

இன்று தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள். இன ஒடுக்குமுறைக்கெதிராகவும் சமூக அடக்குமுறைக்கெதிராகவும் போராடப்புறப்பட்ட தமிழீழப் பெண்களுக்கு வழிகாட்டியான வித்தொன்று வீழ்ந்தநாள். பெண்களால் இயலாதென மூலையில் முடங்கிக் கிடந்த ஒரு சமூகத்திலிருந்து வீறுடன் புறப்பட்டுவந்து விடுதலைப் போர்தொடுத்த பெண்களின் புரட்சிகர நாள்.

எமது விடுதலை இயக்கத்தில் களச்சாவடைந்த முதற் பெண்போராளியான இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி (பேதுறு சகாயசீலி) அவர்களின் நினைவுநாளே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகும். எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் தந்திரத்தோடும் நாசகாரத் திட்டத்தோடும் கால்பதித்திருந்த அந்நியப் படைகளுக்கெதிரான போரில் இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி அவர்கள் வீரச்சாவடைந்தார். இனவிடுதலை, பெண்விடுதலை, சமூகவிடுதலை என்ற கோட்பாட்டுத் தளங்களில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் ஆயிரமாயிரம் பெண்கள் பங்குகொண்டு எமது போராட்டத்தைச் செழுமைப்படுத்தினார்கள்.

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பரியது. ஆர்ப்பரித்துவந்த எதிரிப்படைகளுக்கெதிராக எமது பெண்கள் சளைக்காது போராடினார்கள். வீரமிகு சமர்க்களங்கள் பலவற்றை எதிர்கொண்டார்கள். சாத்தியமற்றதென்று கருதப்பட்ட பல சாதனைகளைப் படைத்தார்கள். உடல்வலிமைக்கும் மனவலிமைக்கும் சவால்விடக்கூடிய பல நெருக்கடிகளைக் கடந்து சரித்திரம் படைத்தார்கள். இராணுவத் துறையில் மட்டுமன்றி நிர்வாகம், அரசியல் என பல பரிமாணங்களில் எமது பெண்களின் பங்களிப்பு வியக்கத்தக்கது. எவ்விதத்திலும், எவ்விடத்திலும் தாம் ஆண்களுக்குச் சளைத்தவர்களில்லை என்பதை அவர்கள் தமது செயற்றிறனால் வெளிப்படுத்தினார்கள்.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே,

இன்று எமது இனம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கின்றது. பிராந்திய வல்லரசுகள் உட்பட உலகநாடுகள் பலவற்றின் துணையோடு எமது மக்கள்மீது கொடூரமான போரை நடாத்தி முடித்துள்ளது சிறிலங்கா அரசு. மனிதநேயமற்ற காட்டுமிராண்டித்தனமான போர் உத்திகளைக் கையாண்டதோடு கொடூரமான உளவியற் போரையும் தொடுத்து தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கின்றது சிங்கள அரசு.

எமது மக்கள் மீதான ஒடுக்குமுறையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளுமே. போர் நிகழ்ந்துகொண்டிருந்த வேளையிலும்சரி, தற்போதைய சூழ்நிலையிலும்சரி, எமது பெண்கள் அனுபவித்த, அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பங்கள் சொற்களால் விவரிக்க முடியாதவை.

இன்று வகைதொகையின்றி, எவ்விதப் பதிவுகளுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பெண்களின் நிலை வெளித்தெரியாமலேயே திட்டமிட்டு மறைக்கப்படுகின்றது. தமிழீழ மண் முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் முற்றிலும் இராணுவத்தால் புடைசூழ வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் கொடுமைகள் முழுமையாக வெளியே வராதவண்ணம் தடுக்கப்படுகின்றன.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே,

எமது இனத்தின் விடுதலைக்காக பன்னாட்டு மட்டத்தில் மேலும் முனைப்பாகப் போராட வேண்டிய காலமிது. மிகக் கொடூரமாக ஒடுக்கப்பட்டிருக்கும் எமது பெண்களின் அவலநிலையை உலகிற்கு வெளிப்படுத்தி நீதி கேட்கும் நேரமிது.

பன்னாட்டுப் பெண்கள் அமைப்புக்களுடனும் மனிதவுரிமை அமைப்புக்களுடனும் கைகோர்த்து எமக்கான நீதியைப் பெறும் போராட்டத்தை நாம் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். தமிழீழப் பெண்களுக்கெதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை உலகின் முன் வெளிப்படுத்தி எமக்கான நீதியைப் பெறவேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்திலுள்ள பெண்களும் பெண்கள் அமைப்புக்களும் செய்துகொண்டிருக்கும் பணிகள் பெருமைக்குரியவை. இப்பணிகள் மென்மேலும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

## தமிழீழத் தேசியத் தலைவர்

## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து



உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும் இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது போராட்டம் ஒரு உந்துசக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சமூக விடுதலைக்காகவும் நாம் தொடர்ந்தும் போராடுவோம் என்று தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளான இன்று உறுதியெடுத்துக் கொள்வோம்.

நன்றி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழ்ச்செல்வி,

மகளிர் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

தொடர்புக்கு: headquarters@viduthalaipulikal.net



படிப்பகம்